# 100 நாள் வேலைத் திட்டம் : நிதி வழங்காத ஒன்றிய அராஜக அரசைக் கண்டித்து தமிழ்நாடெங்கும் ஆர்ப்பாட்டம்!



திருச்சி தெற்கு மாவட்டம் திருவெறும்பூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட திருவெறும்பூர் வடக்கு ஒன்றிய நடராஜபுரம் ஊராட்சியில் ஒன்றிய கழகச் செயலாளர் கே.எஸ்.எம்.கருணாநிதி தலைமையில் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கலந்து கொண்டு ஒன்றிய அரசைக் கண்டித்து ஆர்ப்பாட்டத்தில் முழக்கமிட்டார். ஆர்ப்பாட்டத்தில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே. என். சேகரன் மாநில அணி நிர்வாகி கவிஞர் சல்மா மற்றும் கழக நிர்வாகிகள் மற்றும் நூற்றுக்கணக்கான பெண்கள் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு ஒன்றிய மோடி அரசுக்கு எதிராக முழக்கங்களை எழுப்பினர்.



ஒன்றிய பா.ஜ.க. அரசு 100 நாள் வேலைக்கான நிலுவை சம்பள தொகை ரூ.4034 கோடியினை உடனடியாக வழங்கிட கோரி விழுப்புரம் தெற்கு மாவட்டம் , திருக்கோவிலூர் சட்டமன்ற தொகுதி, திருவெண்ணெய்நல்லூர் ஒன்றியம், பாவந்தூர் ஊராட்சியில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி கலந்துகொண்டு கண்டன உரையாற்றினார். ஒன்றிய செயலாளர் பி.வி.ஆர்.சு.விசுவநாதன், பேரூர் செயலாளர் பூக்கடை கணேசன், பொதுக்குழு உறுப்பினர் பக்தவத்சலம், ஒன்றிய குழு தலைவர் ஓம்சிவசக்திவேல் உள்ளிட்ட ஒன்றிய, கிளைக் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



தேனி தெற்கு மாவட்டம் உத்தமபாளையம் ஒன்றியம் அம்மாபட்டி பேருந்து நிறுத்தம் அருகில் நூறு நாள் வேலை உறுதி திட்ட நிதி ரூபாய் 4034 கோடி நிதியை தராமல் தமிழ்நாடு பொதுமக்கள் வயிற்றில் அடிக்கும் மோடி அரசைக் கண்டித்து தெற்கு மாவட்ட செயலாளர் கம்பம் ராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ. தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. உத்தமபாளையம் ஒன்றிய செயலாளர் அணைப்பட்டி முருகேசன் மாவட்ட துணை செயலாளர் செந்தில் மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.



திருவண்ணாமலை மத்திய ஒன்றிய தி.மு.க. சார்பில் 100நாள் வேலை உறுதி திட்டத்தின் நிதியை வழங்காத ஒன்றிய மோடி அரசைக் கண்டித்து 3000க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்ட கண்டன ஆர்ப்பாட்டத்தில் கழக மருத்துவர் அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே. கம்பன் உரையாற்றினார். உடன் ஒன்றிய செயலாளர் மெய்யூர் சந்திரன் உட்பட ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள் உள்ளனர்.



திருப்புவனத்தில் மேற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் 100 நாள் வேலைத் திட்டத்தை முடக்கும் வகையில் 4034 கோடி ரூபாயை தர மறுக்கும் மோடி அரசைக் கண்டித்து மாவட்ட துணைச் செயலாளர். திருப்புவனம் பேரூராட்சி தலைவர் த.சேங்கைமாறன். தலைமையில் ஒன்றிய செயலாளர் வசந்தி சேங்கைமாறன். பேரூர் கழக செயலாளர் கா.நாகூர்கனி முன்னிலையில் நடைபெற்றது. கண்டன ஆர்ப்பாட்டத்தில் 100 நாள் வேலை திட்டத்தில் பயன்பெறும் ஏராளமான பெண்கள் கலந்து கொண்டார்கள்



விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் 100 நாள் வேலை உறுதி திட்டத்தில் தமிழ்நாட்டுக்கு தரவேண்டிய ரூபாய் 4034 கோடி நிதியை வழங்காமல்தமிழ்நாட்டை தொடர்ச்சியாக வஞ்சித்து வரும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து செஞ்சி தொகுதி செஞ்சி ஒன்றியம் நரசிங்கராயன் பேட்டை ஊராட்சி எம்.ஜி.ஆர். நகரில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளரும் செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான செஞ்சி மஸ்தான் தலைமை தாங்கி கண்டன உரை நிகழ்த்தினார். உடன் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், ஒன்றிய செயலாளர்கள் விஜயராகவன் ,பச்சையப்பன், பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆனந்த் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.



100 நாள் வேலை சம்பளம் நிதி வழங்காத ஒன்றிய அரசைக் கண்டித்து பழனி ஒன்றியம் சிவகிரி பட்டி ஊராட்சி அலுவலகம் முன்ப திண்டுக்கல் கிழக்கு மாவட்டச் செயலாளர் இ.பெ. செந்தில்குமார் தலைமையில் கண்டனம் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.



தேனி வடக்கு மாவட்டம் பெரியகுளம் தெற்கு ஒன்றியம் ஜெயமங்கலம் பஸ் நிறுத்தம் அருகில் 100 நாள் வேலை உறுதி திட்ட நிதி ரூபாய் 4034 கோடி நிதியை தராமல் தமிழ்நாடு பொதுமக்கள் வயிற்றில் அடிக்கும் மோடி அரசைக் கண்டித்து வடக்கு மாவட்ட செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி. தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. தெற்கு ஒன்றிய துணை செயலாளர் பாஸ்கர ஐயன்.கிளை பொறுப்பாளர் கருப்பையா, காந்திநகர் கிளை பொறுப்பாளர் ராமையா, நகரச் செயலாளர்கள் முகமது இலியாஸ், புருஷோத்தமன், நாராயண பாண்டியன் மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.



100 நாள் வேலைவாய்ப்பு திட்டத்தில் சம்பளம் கொடுக்காத ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து சேலம் கிழக்கு மாவட்டம் அயோத்தியாப்பட்டணம் தெற்கு ஒன்றியம் காரியப்பட்டியில் கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் ஒன்றியக் கழகச் செயலாளர் ஏ.விஜயகுமார், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ ஏ ஆறுமுகம் ,ஒன்றிய நிர்வாகிகள் மற்றும் ஏராளமான பெண்கள் கலந்து கொண்டு கண்டன கோஷம் எழுப்பினர்.



திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் மேற்கு ஒன்றியம், மாடப்பள்ளி, அண்ணாசிலை அருகில் 100 நாள் வேலை திட்டத்தின் மூலம் தமிழகத்திற்கு ரூ.4034 கோடியை விடுவிக்கக் கோரி ஒன்றிய அரசைக் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அ.நல்லதம்பி தலைமையில் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் கந்திலிகரிகாலன், சு.ராசேந்திரன், விஜயாஅருணாசலம், உள்ளிட்ட கழகத்தினர், பொதுமக்கள் மற்றும் மகளிர் என ஏராளமானோர் கண்டன பதாகைகளை ஏந்தி முழக்கங்களை எழுப்பினர்.